முருகப்பெருமான் துணை

**மகான் மிருகண்டரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.01.2023, திங்கட்கிழமை

1. பிரம்ம ஞானியே அரங்கா வாழ்க
   பேரருள் புரிந்து தருமமாகவே
   வரம்பல தந்து மக்களை காக்க
   வள்ளலாய் வந்த ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சுபகிருது சிலை திங்கள்
   இனிமைபட இருபானை திகதி சோமவாரம்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 25 ம் நாள் 09.01.2023, திங்கட்கிழமை)
   இயம்பிடுவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை மிருகண்டரிஷி யானும்
   அருளுவேன் உலகநலம் காண
   ஆசிதந்து காக்கும் அரங்கன்
   அவதார மகிமை அறிந்துமக்கள்
4. மக்களெல்லாம் அரங்கன் வாழ்
   மாதவக் குடிலை அணுகி வர
   ஆக்கம் தரும் அரங்கன் உபதேச
   அருள்மொழிகளை ஏற்று நடக்க
5. நடக்கவே நல்லெண்ணம் திடம்
   நடத்தையில் தெளிவு கூடி
   இடர்கள் எவ்வுயிர்க்கும் தரா
   இனிதே தயவு நிறைந்த குணம்
6. குணநலம் மனபலம் கூடி
   குருமார்க்கம் விடா தொடர்ந்து
   ஞான பலம்தனை அடைவர்
   ஞானிகளின் பேரிலான பூசை
7. பூசைதனை அனுதினமும் செய்து
   புண்ணியமாம் அன்னதானமிடல்
   நேசமுள அரங்கன் தருமம் காத்து
   நிலவுலகினில் வளர்த்து வர
8. வருகவே ஞானிகளின் ஆசி
   வரமாகக் கூடி உலகினில்
   முருகப் பெருமான் வழிபாடாகி
   முழுமை ஞானமாக கலந்திடும்
9. கலந்திட இணையிலா சக்தி
   காத்திடும் கந்தப்பெருமானின்
   பலத்தால் சகலதும் நிறைவேறி
   பாருலகில் வாழும் காலமே

10. காலமே கந்தப் பெருமான் காட்சி
கண்டடைந்து ஞானவாழ்வு
காலமாகி கனியும் சூட்சும பலமாக
கடைத்தேற உண்டான மாற்றம்

11. மாற்றம் கூடி மக்களிடையே
மகத்துவம் மாதவபலமுமாகி
ஆற்றல்பட ஞானிகளாகவே மாறுவர்
அரங்கன் வழியில் அற்புதம் படைப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–